# மெட்ரோ ரயில் சேவை நேரம் மாற்றம்

சென்னை, ஏப். 19: கரோனா பரவல் காரணமாக, சென்னை மெட்ரோ ரயில் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி, மெட்ரோ ரயில் சேவைகள் திங்கள்கிழமை முதல் சனிக்கிழமை வரை தினமும் காலை 5.30 மணி முதல் இரவு 9 மணி வரை இயக்கப்படும். இதுகுறித்து, மெட்ரோ ரயில் நிறுவனம் திங்கள்கிழமை வெளியிட்ட செய்தி:-

கரோனா நோய்த் தொற்று இரண்டாவது அலை வேகமெடுத்து வருவதையடுத்து, இதை கட்டுப்படுத்த தமிழகத்தில் இரவு நேர ஊரடங்கு, ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கு உள்பட பல்வேறு கட்டுப்பாடுகளை தமிழக அரசு அறிவித்துள்ளது. இந்தக்கட்டுப்பாடுகள் செவ்வாய்க்கிழமை முதல் அமலுக்கு வருகின்றன.

இந்த கட்டுப்பாடுகளை பின்பற்றி, சென்னை மெட்ரோ ரயில் சேவை செவ்வாய்க்கிழமை முதல் மாற்றம் செய்யப்படுகிறது.



மெட்ரோ ரயில் சேவைகள் திங்கள்கிழமை முதல் சனிக்கிழமை வரை தினமும் காலை 5.30 மணி முதல் இரவு 9 மணி வரை மட்டும் வழங்கப்படும். மெட்ரோ ரயில் சேவை முன்பு இரவு 11 மணி வரை வழங்கப்பட்டது. தற்போது இரண்டு மணி நேரம் முன்பாக நிறுத்தப்படுகிறது.

நெரிசல் மிகுந்த நேரங்களில் 5 நிமிடத்துக்கு ஒருமுறையும், நெரிசல் இல்லாத நேரங்களில் 10 நிமிடத்துக்கு ஒருமுறையும் ரயில்கள் இயக்கப்படும். இதில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

தினமும் கடைசி மெட்ரோ ரயில் பயணத்தைப் பொருத்த வரை, அனைத்து முனையங்களில் இருந்தும் (சென்னை சென்ட்ரல், விமானநிலையம் மெட்ரோ, பரங்கிமலை மெட்ரோ, விம்கோநகர் ஆகிய மெட்ரோ ரயில் நிலையங்கள்) இரவு 8.55 மணி முதல் 9.05 இடையே கடைசி மெட்ரோ ரயில் பயணம் தொடங்கும். இந்த முனையங்களை இரவு 9.50 மணிக்கு அடையும்.

பயணிகள் மெட்ரோ ரயில் நிலையங்களில் காத்திருக்கும் போதும், ரயில் பயணத்தின்போதும் சமூக இடைவெளியை பின்பற்றுதல், முகக்கவசம் அணிதல் ஆகியவற்றை பின்பற்ற வேண்டும் என்று மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.